1973 நவம்பர் 23]

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தென் பிராந்தியங்களில் உள்ள வானொலிகளில் இந்த ட்ரான்ஸ்மிஷன் சக்தி குறைவாக இருப்பதால், ஒலி சரியாகக் கேட்கவில்லை. ஆகையால், திருநெல்வேலியில் இருப்பதை விஸ்தரிப்பதற்கு உடனடியாக ஏதாவது சிறப்புத் திட்டம் தயாரிக்க மத்திய அரசை மாநில அரசு வற்புறுத்துமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அதைத்தான் ஏற்கெனவே சொன்னேன். நெல்லை, கோவை ஆகிய இரண்டு இடங்களிலும் உள்ள வானொலி நிலையங்களை முழுமையான வானொலி நிலையங்களாக ஆக்க வேண்டுமென்ற கோரிக்கையை மாநில அரசு மத்திய அரசிடம் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது.

திரு. நா. வீராசாமி : தலைவர் அவர்களே, ஏற்கெனவே இங்கே இருக்கின்ற வானொலி நிலையங்களில் தமிழ் கேட்பதே அரிதாகி விட்டது. ஆகவே, தமிழிசை நிகழ்ச்சிகளும், மற்ற தமிழ் நிகழ்ச்சிகளும் அதிகமாக ஏற்பாடு செய்ய மத்திய அரசை நம்முடைய அரசு வற்புறுத்துமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கேள்வியிலே இருக்கின்ற விஷயம் உண்மையாக இருக்குமானால் இந்தக் கேள்வியைக் கொண்டே வானொலி நிலையத்தார் திருத்திக் கொள்ளுவார்கள் என்று நம்புகிறேன்.

College for Siddha System of Medicine at Chingleput

* 331 *Q.*—THIRU S. SANGUMUTHU THEVAR : Will the Hon. the Minister for Health be pleased to state—

(*a*) Whether the Palani Andavar Devasthanam has offered Rs. 5 lakhs to run a Siddha College of Medicine at Chingleput; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) இதுவரையில் இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

புலவர் சி. பழனிச்சாமி : தலைவர் அவர்களே, திறமை மிகுந்த, அனுபவம் வாய்ந்த சித்த மருத்துவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் நல்ல முறையில் சித்த வைத்தியசாலைகள் வைத்து நடத்தி

வருகிறார்கள். அது மாத்திரமல்லாமல், பழனி மலைத் தொடரில் சித்த மருத்துவத்திற்குத் தகுந்த மூலிகைகள் கிடைப்பதாகச் சொல்லப்படுகிறது. எனவே, சித்த மருத்துவக் கல்லூரியைப் பழனி நகரத்தில் அமைத்துக் கொள்ள இந்த அரசு அனுமதிக்குமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, புதிய கல்லூரி அனுமதிக்கக் கொள்கை அடிப்படையில் தடை இல்லை. ஆனால், நிலைமை அடிப்படையில் தடை இருக்கிறது. 'பாடம் நடத்துவதற்குத் தகுதியுள்ள பேராசிரியர்கள்' என்று ஏற்றுக் கொள்ளப் படக்கூடியவர்கள் இன்னும் போதுமான அளவு கிடைக்கவில்லை. பாளையங்கோட்டைக் கல்லூரியில் பட்டப் படிப்புக்கு மேற்படிப்பு ஏற்படுத்திய நிலையில், அதற்கே தகுந்த ஆசிரியர்கள் ஓரிருவர் வெளியேயிருந்து வர வேண்டியிருந்தது. ஆகவே, ஆசிரியர்கள் போதுமான அளவு கிடைக்கக்கூடிய நேரத்தில் கல்லூரி ஏற்படுத்தலாம். இல்லையானால், சித்த மருத்துவர்களுக்குப் பயிற்சி வகுப்பைப் பழனியில் நடத்தினால் அரசு வரவேற்கும்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவர் அவர்களே, இந்த சித்த மருத்துவக் கல்லூரி நடத்துவதற்கு என்ன என்ன தகுதிகள் இருக்க வேண்டும் ? தனியார்த் துறையில் ஒருசிலர் விண்ணப்பம் கொடுத்திருக்கிறார்கள். குறிப்பாக, நாகர்கோயிலில் ஒருவர் விண்ணப்பம் கொடுத்திருக்கிறார். என்ன முறையில் அதற்கு அனுமதி வழங்கப் போகிறார்கள் என்பதை அமைச்சரவர்கள் விளக்குவார்களா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, எதிர்க் கட்சித் தலைவரவர்கள் குறிப்பிட்டது முன்சிறையிலுள்ளதைப் பற்றியதாக இருக்க வேண்டும். அங்கே ஒரு கொட்டகை இருந்தது. நான் போய்ப் பார்த்தேன். அங்கே யாரோ ஒரு சித்த மருத்துவர் இருக்கிறார். பி.ஐ.எம். பட்டப் படிப்புத் தகுதி இருக்க வேண்டும் என்று அகில இந்திய மருத்துவ ஆலோசனைக் குழு கூறியுள்ளது. அந்தப் பட்டப் படிப்பு படித்தவர்கள் இல்லை யென்றால், எல்.ஐ.எம். படித்தவர்களாவது இருக்க வேண்டும். அல்லது. ஏதாவது ஒரு வகையில் அவர்கள் மிகப் பெரிய தேர்ச்சி பெற்ற சித்த மருத்துவப் பாடம் நடத்தும் ஆற்றல் பெற்றவர்களாக

இருக்கவேண்டும். சில மருந்துகளைத் தயாரிக்கத் திறமை வாய்ந்தவர்களாக இருப்பதனுலேயே அவர்கள் சித்த மருத்துவ கல்லூரி நடத்துவதற்குத் தகுதி பெற்றவர்கள் ஆகமாட்டார்கள்.

திரு. எஸ். வடிவேல் : தஞ்சை மாவட்டத்தில் சீர்காழியை அடுத்து வைத்தீஸ்வரன்கோயிலில் ஒரு சிறந்த மூலிகைத் தோட்டம் இருக்கிறது. அந்த இடத்திலுள்ளவர்கள் மிகச் சிறந்த முறையில் வைத்தியம் செய்து, அதனுல் பல மக்களுக்கு நன்மை ஏற்படுகிறது. அந்த வைத்தியசாலை இருப்பதையும், அருகில் மூலிகைத் தோட்டம் இருப்பதையும் கருதி, அங்கே ஒரு சித்த மருத்துவக் கல்லூரி அமைக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, நல்லவேளை ஒரு தோட்டத்திற்குப் பக்கத்தில் கல்லூரி அமைக்கலாம் என்று சொன்னுர்கள். ஒவ்வொரு செடிக்கும் பக்கத்தில் கல்லூரி அமைக்கக்கூட அடுத்த ஆலோசனை வரக்கூடும். நானும் வைத்தீஸ்வரன்கோவிலைச் சேர்ந்தவன் என்பது மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரியும். அங்கே கண் சிகிச்சையில் திறமையுள்ள சித்த மருத்துவர் இருந்தார். அவர் அதற்காக சில மூலிகைகள் வைத்திருந்தார் என்ற அளவில் செய்தி உண்டு. தருமபுரம் ஆதீனத்தின் சார்பாக அதைச் செய்தவர்கள் தொடர்ந்து செய்ய இயலாத நிலைமை ஏற்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விவரம் தந்தால் அந்த டாக்டர் அந்தத் தொழிலைச் செய்வதற்கு ஊக்கப்படுத்துவதற்கு ஏதாவது முயற்சிக்கலாம்.

திரு. எம். சுரேந்திரன் : சார், ஒரு சித்த வைத்தியக் கல்லூரி ஆரம்பிக்கும் நோக்கம் அரசாங்கத்திற்கு இருக்கிறதா ? அப்படி யென்ருல் கல்லூரியில் சேர்வதற்கு ஏராளமானவர்கள் தேங்கி நிற்கிருர்களா ? இப்பொழுது பாளையங்கோட்டைக் கல்லூரியில் எவ்வளவு மாணவர்கள் இருக்கிருர்கள் ? அங்கு இடம் கிடைக்க வில்லை என்ற புகார் வந்திருக்கிறதா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, பாளையங் கோட்டையிலுள்ள கல்லூரிக்கு விண்ணப்பிக்கும் மாணவர்களில் மூன்றிலே ஒருவர் அல்லது இரண்டிலே ஒருவர்தான் எடுக்கப்

படுகிறார்கள். இடம் கிடைக்கவில்லை என்ற புகார் அங்கு மட்டுமல்ல, பஸ்களிலேயும், இரயில்களிலேயும்கூட இடம் கிடைக்கவில்லை என்ற புகார்கள் இருக்கின்றன. ஆகவே, கல்லூரிக்கு விண்ணப்பிக்கின்றவர்கள் எல்லோருக்கும் இடம் கொடுத்தாக வேண்டுமென்பது வளர்ச்சி பெறுகின்ற சமுதாயத்திற்குத் தேவையான கொள்கை அல்ல. சென்னையில் இன்னொரு கல்லூரி ஆரம்பிக்கலாம் என்று ஆலோசிக்கப்பட்டது. அதற்குக் காரணம் சென்னையில் ஆரம்பித்தால் சித்த வைத்தியத்தின் தனிச் சிறப்பு உலகத்திற்குப் புலனாகும் வாய்ப்பிருக்கிறது என்ற கருத்து இருக்கிறது. அதற்கான சூழ்நிலை சென்னையில் இருப்பதால் மறுபடியும் இங்கே ஒரு கல்லூரி தொடங்கலாம் என்றால், அதற்குக் குறைந்தது சுமார் 25 இலட்சம் ரூபாய் தேவைப்படும். பழனி அறநிலையத்திலிருந்து 5 இலட்சம் ரூபாய் நன்கொடை கிடைத்தால் மேலும் நன்கொடைகளைத் திரட்டி இந்த முயற்சியைத் தொடங்கலாம் என்று ஆலோசிக்கப்பட்டது. ஆனால் 5 இலட்சம் ரூபாயை அவர்கள் சேர்த்துத் தர இயலாததால் நாம் இந்த ஆலோசனையை ஒத்திவைத்திருக்கிறோம்.

திருச்சிராப்பள்ளி மருத்துவ மனைக்கு நீர் வழங்கல்

*** 332 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சிராப்பள்ளியிலுள்ள அரசினர் பெரிய மருத்துவ மனையில் தேவைப்படும் தண்ணீர் விநியோக வசதி தற்போது இல்லை என்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், அது குறித்து எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, திருச்சியிலுள்ள அரசினர் பெரிய மருத்துவமனையில் மழைக்காலத்திலும் கூட போதுமான தண்ணீர் விநியோகம் இல்லை என்பதை நானே தங்கிச் சிகிச்சை பெறும்போது நேரில் கண்டேன். இதைத் தீர்ப்பதற்குத் தனியே ஒரு 'ஓவர்ஹெட் டேங்க்' கட்டி அதன்மூலம்